இந்து தமிழ்
THE HINDU

கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் (ஐஎஃப்ஜிடிபி) செயல்பட்டுவரும் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது. இதுதவிர, பிளாஸ்டிக் மாசுபாட்டை வெல்லுங்கள் என்ற தலைப்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு மொபைல் புகைப்பட போட்டி நடத்தப்பட்டது. இதில், பலர் கலந்துகொண்டனர். 'பிளாஸ்டிக் மாசுபாட்டுக்கான தீர்வுகள்' என்ற நடப்பு ஆண்டின் கருப் பொருளை எடுத்துக்காட்டும் வகையில், விழிப்புணர்வு போஸ்டர் ஒன்றை ஐஎஃப்ஜிடிபி இயக்குநர் சி. குன்னிக்கண்ணன் வெளியிட்டார். அதன் நகல், கோவை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

40. News in The Hindu Tamil, Coimbatore, 06.06.2023, Observance of World Environment Day 2023 by ICFRE-IFGTB EIACP.